Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஹூ (1889) ஆவணியீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - கூள] யாழ்ப்பாணம்:- மன்மத ஹூ ஐப்பசி மீ சஉ வெள்ளிக்கிழமை (21 OCT. 1955) [இல-உக]

# மனத்தொடு வாய்மை மொழிந்த மன்னன் அரிச்சந்திரன்

———:o:———

## தவத்தொடு தானஞ் செய்தாரிலும் தலைசிறந்து விளங்கினான்

( முற்றொடர்—2 )

இவ்வாறான நிகழ்ச்சிகளால் சுடலையை அடைகிறாள். தெய்வக் காவலிலே பிள்ளையை வைக்கிறாள் குறங் கட்டைகளைத் தேடி யெடுத்து வந்து அடுக்கிப் பிள்ளையை அதன் மேல் வைத்து அக்கினியை மூட்டுகிறாள். எரியக் கண்ட அரசன் வந்து நிலையைக் குழப்புகின்றான், அரசன் சுடலை வழக்கத்தையெடுத்துரைக்கின்றான். கூறுகின்றாள் சந்திரமதி.

"பொருளுடையேன்
தமருடையே ஞனலிந்தப்
புத்திரனைத் தோண்மீது
வைத்துப் போந்திவ்
விருளிடையிற் சுடலையில்வந்
தெய்துவேனோ!
வெரிந்த குறைக்கட்டையினி
லேற்றுவேனோ
தெருளுடையா யறமுடையாய்
வினையேனீன்ற
சிறுவனையான் சுடக்கருணை
செய்யாய் தேயா
யருளுடையா யாதார
மற்றோற் குன்ற
னடியிணையே தஞ்சமென
வலறி வீழ்ந்தாள்"

இவ்வாறான சம்பாஷணை ஊடே சந்திரமதியின் கழுத்திற் றாலியை அரசன் காண்கின்றான். கள்ளி உன்னை விட உலகத்தில் ஒருவரும் இல்லை, என்கிறான். சம்பாஷணை நீளுகிறது. பின் ஒருவரை ஒருவர் இன்னாரென உணருகிறார்கள். என்றாலும் தனக்குரிய வாய்க்கரிசியை விடலாம், முழத்துண்டும், காற்பணமும் தந்தே தீரவேண்டும், என்கிறான் அரசன். சந்திரமதி பிராமணன் வீட்டை நோக்கிச் செல்லுகிறாள். பாவம், எவ்வளவு அலைச்சல். காசி இராசன் நகர் வீதியை அடைகிறாள். இறந்து கிடக்கும் காசி இராசன் புதல்வனை நோக்குகிறாள். தன் புதல்வனை ஏதோ பேய், நாய்கள் கொண்டு வந்துபோட்டிருக்கலாமோ என்று எண்ணுகிறாள். அதனைத் தூக்கி மடிமேல் வைத்துப் பார்க்கிறாள்.

'காகம் இருக்கப் பனம் பழம் விழுந்தமாதிரி' காவலாளரும் பின்பக்கத்தே நின்று பார்க்கிறார்கள் கொலைகாரி இவள்தான் என்று எண்ணுகிறார்கள். 'பனையால் விழுந்தவனை மாடேறி உழக்கிய மாதிரி' அந்தோ யாரும் என்ன செய்ய முடியும். அடி — அந்தப் பழுவுக்கும், இந்தப் பழுவுக்கும். இடி —

"உயிர்க் கொலை புரிந்தவர்
முகக்குறி யுரைக்குங்
கையிற்குறி யுரைக்கு
மிருகட்குறி யுரைக்குங்
குயிற்குரன் மடந்தை யிவள்
கொன்றகுறி யுண்டென்
றயிர்பிலை யெனக்கென
வமைச்ச ரொடுரைத்தான்".

என்னும்பா. விடாப் பிடியாக் காவலர் இவள்தான் கொலை செய்தாள் என்கிறார். அரசன் சந்திரமதி

காரைநகர், திரு. வே. பொன்னம்பலம்

முன்னுக்கும் பின்னுக்கும். இவ்வாறான நிகழ்ச்சி பொலியக் காசி இராசன் கொலு மண்டபத்திற்குச் செல்லுகிறாள். கொலைகாறி என்கிறார் காவலாளர். அரசன் அவளை நோக்குகிறான். தோற்றம்—கொலை செய்தவளாகக் காட்டப்படவில்லை

யிடம் வினவுகின்றான்.

"மெய்புரை செயிற்
பொய்யெனமேவி யதுவீணு
மையமிதி னில்லையதனற்
புரையிலாத
பொய்யுரையு மெய்யொடு
பொருந்தமென நாடத்
தையலவரோடிது தனைப்பகா
லுற்றான்"

தொடர்ச்சி 3-ம் பக்கம்

ஆசிரியல் வரி:

# ஆர்ப்பரிப்புக்கு அரசாங்கம் அஞ்சுகின்றதா?

## பாடிகாவலர் விளையாட்டுப் பார்க்கின்றார்கள்போலும்!

போன புதன்கிழமையன்று புத்தகுருமார்களைப் பொதுவுடைமையினர் தாக்கினார்கள் என்றாகள். ஆனால் ஒன்றும் அறியாது வியாபாரத்திற் கண்ணாயிருந்தவர்கள் மீது குழப்பக்காரர் கண் வைத்துப் பொருளை அழித்துப் பொன்கொண்டு போய்விட்டார்கள். யாரோ யாரோ பேச்சுவார்த்தை. வேறு யாருக்கோ விபத்து. என்ன விபரீதம் பாடிகாவலரும் பார்த்திருந்தார்களே!

இந்த ஞாயிற்றுக்கிழமை இடதுசாரிகளுள் இன்னொரு சாரார் இருமொழிக் கூட்டம் நடத்தினார்கள். மொழிக்கூட்டம் முடிவதன்முன் சிலரின் கை மொழியும் முறிந்துவிட நேர்ந்ததாம். இங்கும் பாடிகாவலருக்குக் குறைவில்லை. ஆனால் கலவரம நடந்த முடிந்தது.

இந்த நிகழ்ச்சிகள் எதைக் குறிக்கின்றன? ஐ.தே. கட்சி ஆதிக்க அரசாங்கம முதுகெலும்பற்றதாய் முன்னின்று முட்டாள்களை முறைப்படி அடக்க முடியாததாய்ப் பதுனற்றதாய் மெலிந்து ஒதுங்கா விட்டதா? அன்றி அரைக் கண் பார்வையும் கடைக்கண்ணோக்குமாய் நிலைமையை

ஆராய்ந்து வருகின்றதா?

அது ஒரு புறம் இருக்க ஆர்ப்பரிப்பில் ஆண்டுகள் பலவாகக் கைதேர்ந்த பொதுவுடைமையினரும் சமசமாசக் கட்சியினரும் அதன் உண்மையான இன்பத்தைத் தாங்களே உருசி பார்க்கக் கூடிய தாய்க் காலம் மாறியதுதான் வித்தை. எத்தனை முறை காலிமுக முன்றிலிற் கலவரஞ் செய்தார்கள் இடதுசாரிகள். எவ்வளவு ஆர்ப்பரிப்பு நடத்தினார்கள். சட்டத்தையும சட்ட பரிபாலகர்களையும் பாடிகாவலரையும் தட்டிவிட்டுத தங்கள் ஆவேசத்தை ஆடிக் காட்டினார்கள்! அரிசி விலை குறைப்பதற்கு ஆவணி ஆர்ப்பரிப்பு நடத்தி அட்டகாசம் செய்தார்கள். அந்த ஆட்களே இப்போது பாடிகாவலரின் பாதுகாவலில் தங்கள் இல்லங்களுக்கு அனுப்பப் பெற்றனர் என்று செய்திகள் கூறுகின்றன. தன் வினை தன்னைச் சுடும் என்பது முன்னோர் மொழி அல்லவா?

கல்லால் எறிந்தும் கைத்தடியால் அடித்தும் பொல்லாற் புடைத்தும் புகை வகை உபயோகப்படுத்தியும், கூவென்றும் கோவென்றும் குழறிக் கூத்தாடித்தானா அரசியல் அலுவல்கள் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்? இவ்வாறு தானா முன்னோர்கள் இந்நாட்டை ஆண்டுவந்தார்கள்?

மாறுதற்கு விட்டுவிடமுடியாது. தன்னுடைய மொ

தொடர்ச்சி 5ம் பக்கம்

# கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தது தமிழினம்

———0———

## தமிழன் மனத்தில் உதியாத கருத்து உலகில் எங்குமே தோன்றியதில்லை


### உணர்ச்சி ததும்பும் சொன்மாரி பொழிந்து, தமிழ்த்தொண்டு செய்து கலாசார அடிமைத்தனை நீக்கத்துக்கு அழைக்கின்றார் குன்றக்குடி அடிகளார்!

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடந்த வரவேற்பில் குன்றக்குடி அடிகளார் பேசும்போது, 'தமிழன் 'மனதில் உதியாத கருத்து உலகிலில்லை. வைரக் கருத்துக்களைப் பூட்டி வைத்து கருத்துக்கள் தேடி உலகெங்கும் அலைவானேன்?"

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில தோன்றியது தமிழினம். அது இணையற்ற இலக்கணம், இலக்கியம், சிற்பக் கலை என்பவற்றைப் பெற்று விளங்கிற்று.

இமயத்தில் புலிக்கொடியைப் பொறித்து இந்தோசீனா, கிழக்கிந்திய தீவுகள், இலங்கை ஆகிய நாடுகளில் பரவியிருந்த த[illegible] பொய்யாய்ப் [illegible]யாய்ப் போய்விட்டது.

நாம் உடல் வளர்ச்சிக்கு உட்கொள்ளும் உணவு உள்ளே சென்று செங்குருதியாக மாறி உடலையே வளர்க்கிறது. அதே உணவு நஞ்சாகி தசையையும், எலும்பையும் அறுத்தால் என்ன நடக்கும் .... ....? அதுபோல் நாம் ஏற்றுக கொள்ளும் பிறமொழிக கருததுகள், கொள்கைகள், [illegible] வளர்ப்பனவாய் அமைய வேண்டும். அவை நஞ்சாக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

ஐப்பசி 8உ (25-10-55) செவ்வாய்க்கிழமை விஜயதசமித் திருநாளின்பொருட்டு சைவப்பிரகாச யந்திர சாலையும் இந்துசாதனக் காரியாலமும் மூடப்படும் என்று அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

— அதிபர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். மன்மத ஹூ ஐப்பசி௴ ௪ உ வெள்ளிக்கிழமை

## யார் கையில் இருக்கின்றது அதிகாரம்

மக்கள் ஆட்சி முறையின் மனிதப்பண்பாடு அடிப்படை நோக்கமாகவுள்ளதென்பது அரசியல் ஞானிகள் கருத்து. அவ்வாறாகச் செயல்முறையிற் காணப்படுவதற்கு ஆட்சி ஆதிக்கப் பொறுப்பு வாய்ந்தவர்கள் மனிதப் பண்பாடுடையவர்களாயிருத்தல் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகின்றது. இந்நாட்டில் மக்கள் ஆட்சி நடைபெறுகிறது என்பது பொதுவான எண்ணமும் நம்பிக்கையுமாகும். ஆனல் அவ்வித ஆட்சியிற் பொது மக்கள் அநுபவிக்க வேண்டிய அமைதி பாதுகாப்பு முதலியனவற்றை உண்மையில் அவர்கள் பெறுகிறார்களா என்று உற்று நோக்கும்பொழுது சென்ற ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மாநகர மண்டபத்திலும் அச்சுற்றுடலிலும் நடைபெற்ற அட்டூழியங்களும் ஆர்ப்பரிப்புகளும இல்லையென்றே காட்டிவிட்டன.

யார் கையில் இருக்கின்றது அதிகாரம்? ஆட்சி நடத்தும் அமைச்சவையும் முதல் அமைச்சரும் இப்பொறுப்பை பொல்லாங்கிழைக்கும் புரட்சிக்காரர் கையில் ஒப்புவித்து விட்டார்களா? இக்கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன. மக்கள் தங்கள மனத்தில் எழும் கருத்துக்களை ஏனையோர் அறியும் வண்ணம் வெளிப்படுத்துவது சனநாயகமுறையின் தனிப் பண்பாடல்லவா? அவ்வாறிருக்க, மொழிகள்பற்றி ஒரு கட்சியினர் தங்கள் உள்ளக்கிடக்கையை உரைப்பதற்காகக் கூடியிருக்கும் அமையத்தில் அன்னாரை அங்ஙனஞ் செய்யாது தடுப்பதற்கு பயங்கரமான பலாத்காரத்தைப் பயன்படுத்திக் கிளர்ச்சி செய்த மனிதப் பதர்களை அரசினர் என் செய்தார்கள்? குழப்பம் ஏற்படும் என்று முன் அறிந்த அரச அதிகாரிகள் ஏன் வாளாவிருந்தார்கள்? கிளர்சசிக்காரரை அடக்கி ஒழுங்கான முறைக்கு ஆளாக்கி வைத்திருந்தால் அன்று அட்டூழியங்கள் நடைபெற்றிருக்குமா? மக்கள் நலத்திற்காக நாடாளும் பொறுப்பை ஏற்கும் மந்திரிகள் அரசியல் ஞானத்தோடு அறிவியல் முதிர்ச்சியும் உடையவர்களாய் ஒழுக்க சீலர்களாய் உண்மைநெறி நிற்போராய் இருப்பரேல் ஈழத்தில் எச்சாதியினரும் எம்மதத்தவர்களும் எவர்களும் அச்சமின்றி அபாயமின்றி வாழ்ந்துவரவும் சுதந்திரத்தின் பயனையும் பேற்றையும் அநுபவிக்கவும் முடியும் என்பது சொல்லாமலே யமையும்.

x x x

### அது அதிர் வெடி! மற்றது வெற்று வெடி!!

சமசமாசக்கட்சித் தலைவர் கொணர்ந்த மொழிகள்பற்றிய ஆலோசனையை முதல் அமைச்சர் அரசியல் அதிர்வெடி என்று சொல்லி ஏளனஞ்செய்ததுமன்றிப் பழங்கதையைப் பாரதமாவெடுத்துரைத்து 'ஓடவும் விடமாட்டேன் பிடியுங் கொடுக்கமாட்டேன்' என்ற வகையில் உபதேசம் செய்து நாழிகையை நன்கு கழித்து ஆதிக்கக் கட்சிக்குவெறுப்பான நிலைமையைச் சமாளித்துவிட்டார். பிரதமரின் பேச்சு வெற்றுவெடியென்பதை யாவருமறிவர்.

உண்மையில் இந்த மொழிகள்பற்றிய கேள்வியிற் பாராளுமன்ற அங்கத்தவர்களிற் பலர் தெளிந்த சிந்தையுள்ளவர்களாகக் காணப்படவில்லை. சமவரிசை என்ற சொற்றொடர் ஒவ்வொருவரால் வெவ்வேறு விதமாக விளக்கங் கூறப்பட்டு வருகின்றது. ஈழத்தின் வருங்கால வளர்ச்சியையும் நன்மையத்தையும் உள்ளத்தில் உணரும் தலைவர்கள் இவ்வா[illegible] தெளியாது [illegible] படைவார்களா .... .... ....?

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### மொழிப்பிணக்கா மதப்பிணக்கா அன்றி பதிப்பிணக்கா?

● வரவரமாமியார் அந்த மிருக வருக்கத்தைப் போலானர் என்பதுபோன்று ஈழத்தரசியல் நிலைமையும் கேவல மடைந்துவிட்டதுபோலும். அரசியலில் மத போதகர்கள் மிதமிஞ்சிக் கலந்து கொள்ளும் காலம் இது என்றால் எதுதான் விளையாது? சமசமாசக் கட்சியிற் புத்த குருமார், பொதுவுடைமையிற் குருமார் இருக்கின்றனர் என்று இந்தப் புரட்சிக் கட்சிகள் பெருமைகொண்டு சொல்லி வந்தார்கள். ஆனல் இப்பொழுது அந்தப் புத்த குருமார்களாலேயே இவர்களுக்கும் இன்னல் வந்திருக்கின்றது. மொழிப் பிணக்குக்கும் மதத்துக்கும் என்ன தொடர்பு. மதக் குருமார் நன்னெறி காட்டுவதா? அல்லது கூட்டத்திற் கலந்து கோவிந்தா போட்டு கலவரத்துக்குக் காரணராயிருப்பதா?

### கதையளவிலேதான்

● பாராளுமன்றத்திலே இருமொழிகள் பற்றிய விவாதம் மெல்ல மெல்ல ஒதுக்கப்பட்டமையால் ஆதிக்கக் கட்சியினர் சற்று ஆறுதல் அடைந்திருப்பதாக எண்ணிவிடுதல்கூடாது - சொன்ன சொல்லுக்கு மறுப்பாய்ச் சொன்னவரே நடந்துவிட்டார் ஆகையாற் சட்டம் வேண்டும் என்று கொண்டுவரப் பெற்ற யோசனை அந்தரத்தில் விடப்பெற்றது.

### மறைவழி விடவில்லை

பாராளுமன்றக் கூட்டத்தையே பங்கப்படுத்த ஆரவாரஞ் செய்தவர்களுக்கு இயற்கை அன்னை வெப்பந் தணித்து மூளையைக் குளிர்வித்தும கொண்டகோலம் விட்டுப் போகவில்லை. ஆனல் அட்டூழியத்துக்குப் போதிய அவகாசம் இல்லாமற் போய்விட்டது.

○

### வான் ஒலியில் ஒரு வார்த்தையும் இல்லை

இலங்கை வான் ஒலியில் இந்நாட்டுச் செய்தி அதிலும் பாராளுமன்றப் புதினம் அறிய முடியாத நிலைமையில் மக்கள் இருக்கின்றார்கள் என்பது அரசாங்கத்துக்கும் அப்பகுதி அமைச்சருக்கும் நன்மதிப்பைக் கொடுக்கின்றது!

பாராளுமன்றத்திலே முதல் அமைச்சர் பேசினர், விளக்க வைத்தார், ஒரு குறையுமில்லை என்று உபதேசஞ் செய்தார் என்று புதன்கிழமை இரவு ஒரு செய்தி. அவ்வளவுதான. மறுநாட்காலையில் இதைப்பற்றி வான் ஒலிக்கவில்லை ஏன்?

## அருணந்திசிவாச்சாரியர் குருபூசை

13-10-55 வியாழக்கிழமை அருணந்தி சிவாச்சாரியாருடைய குருபூசை யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபை ஆதரவில் நாவலர் மண்டபத்தில் அன்றிரவு ஆறரை மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

கடவுளாராதனை நிகழ்ந்த பின் ஸ்ரீமத் தி. கலியாண சுந்தரகுருக்கள் அவர்களால் தமிழ்மறையோதப் பட்டது. பின்பு திரு. வே. சோமசுந்தரம் அவர்கள் அருணந்தி சிவாசாரியார் என்னும் பொருள் பற்றிப் பிரசங்கஞ் செய்தனர். மக்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மார்க்கங்களில் நின்றொழுகுவது தங்கள் அந்தக்கரணங்கள் சுத்திபெற்று தாங்கள் முத்தியடைவதற்கேயாம். சமயகுரவர் சந்தானகுரவர் போன்றவர்களுடைய குருபூசைகளை நடத்துவது மேற்கூறிய பலனைக் கொடுக்குமெனக் கூறி அருணந்தி சிவாச்சாரியருடைய வரலாற்றைப்பற்றியும் சிவஞான சித்தியாரைப்பற்றியும் விரிவாகப்பேசினர்.

## உங்கள் நக்ஷத்திரம்?

### எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இருவாரப் பலன்கள், 23—10—55 —— 29—10—55

**மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

சிறிது காலத்திற்கு குடும்ப நிலைமைகள் அதிகம் திருப்தியாயிருக்கமாட்டா. பணத் துறையில் நல்ல வாரம். உம்முடைய கடன்களிற் சிலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம்.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

இந்தவாரம் முழுதும் தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. ஆரம்பத்தில் இடைஞ்சல்கள் நேர்ந்தே புது முயற்சிகள் நன்மையைத் தரும். வார இறுதியில குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு

**மிதுனராசி மிருகசீரிடம், 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது உம்முடைய மனம அமைதியாயிருக்கமாட்டாது முதல் மூன்று நாட்களும் பெருங் குழப்பமானவையாயிருக்கும் பின் அரைவாரம் சில நல்ல பலன்களைத் தரும். தனலாபமும் நிச்சயம்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம பூசம் ஆயிலியம்.**

குடும்பக் காரியங்களில் ஒரு தளபபமான வாரம். ஆனல உத்தியோக சித்தி நிச்சயம். பின் அரை [illegible] வெள்ளி காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார இறுதி திரும்பவும் நன்றாகும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இது ஒரு குழப்பமான வாரமாயிருக்கும். நீர் சண்டைகள் தொடுக்க முந்துவீர். சுற்றோரில் குழப்பங்களுக்கும் நண்பருடன் பிழை எண்ணங்களுக்குமிடமுண்டு. கடைசியிருநாட்களையும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கன்னிராசி உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

தேகசுகம் அதிகம் நல்லாயிருக்கமாட்டாது. இனத்தவர்கள் உமக்குச் சிறிது கோபம் மூட்டுவார்கள் செலவதிகரிக்கும் ஆனல் அவற்றைச் சமாளிக்க வேண்டிய பணம நீர் பெறுவீர்.

**துலாம் சித்திரை 3,4ம் பாதம். சுவாதி விசாகம 1,2,3ம் பாதம**

ஒரு நல்லவாரம். உமக்கிருந்த இடைஞ்சல்களுட் பல நீக்கப்படும், பகைவர் அழிவும் இனத்தவர்களின உதவியும் நிச்சயம். உம்முடைய முயற்சிகளை முன்னேற்றுக.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

இந்தவாரம் நண்பர் அதிக உதவியாயிருப்பர். உம்முடைய முயற்சிகளை நீர் மிக இலகுவாக ஒழுங்குபண்ணக்கூடியதாயிருக்கும். ஆனல செலவதிகரிக்கும் தேகசுகம நல்லாயிருக்கமாட்டாது.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

இந்தவாரம் தனலாபம் நிச்சயம். கடன்கள் நீக்கப்படும். வழக்குகளில் வெற்றிக்கும் பகைவர் அழிவுக்குமிடமுண்டு. புதுமுதல் ஈடுகளுக்கு ஒரு நல்லவாரம்.

**மகரராசி உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

ஒரு தளபபமான வாரம். உம்முடைய முயற்சிகள் எல்லாவற்றிலும் கவனமாயிருக்கவும். அவமானம் உண்டாக்கும் தொழிலுடையவர்கள் உம்முடைய மானத்தைக் கெடுக்கக்கூடும், நண்பருடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். உம்முடைய கருமங்கள் பலவற்றில் ஒரு ஒழுங்கான முன்னேற்றம் உண்டாவதைக் காண்பீர். உம்முடைய எதிரிகள் உமக்குமுன்பு தலைகுனிய வேண்டிவரும். சமூக சித்தியும் நிச்சயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

ஒரு தளப்பமான வாரம். வரவு செலவு சமாளிக்க முடியாது வருந்துவீர். இரகசியப் பகைவரால் சில தொந்தரவுகளுக்கிடமுண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்தொடு வாய்மை மொழிந்த மன்னன் அரிச்சந்திரன்

—————0—0—————

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வாருக மனதில் எண்ணிய சந்திரமதி உயிர் கொன்று உழல் அரக்கி அறியீரோ என்கிருள். பொய்மையும் வாய்மையிடத்த சந்திரமதி தன் விரதத்தைவிட்டாளா. இல்லை. இல்லை. ஆழ யோசித்தாள் நான் கொலைகாரி அல்லள் என்று கூறினால் அவர்கள் ஒப்புக் கொள்ளார்கள் என உணருகிருள். மெய் பேசுகிருள். தான் அரக்கி என்கிருள். தமிழ்ப் பண்பாட்டின் உச்சஸ் தாயியை அடைந்தவளல்லவா சந்திரமதி. நாங்கள் என்ருல் எவ்வளவு பொய்மை அளக்கப் பார்ப்போம். அரசன் யோசித்துக் கொலைக் குற்றத்திற்காளாக்கி வீரவாகு கையிற் கொடுக்கிருன். வீரவாகு அரிச்சந்திரனிடத்தில் ஈய்கின்ருன். காவலாளர் கட்டிய கயிற்றிற பிடித்து இழுத்தும் சகஞ்சுடு கோலாற் றள்ளியு கொண்டு அரிச்சந்திரன் வருகின்ருன். நோக்கினர் நகர மாந்தர். சந்திரமதியைப் பார்க்கிருர். அழகுத் தெய்வமல்லவா அது. கற்புக்கடம்பூண்டவள் அல்லவா அவள். இந்தச் சொருபத்தையா கொலை செய்யப் போகின்ருர்கள். அவர் எண்ணம் வாயால் வெளிப்படுகிறது.

"கையோ செழுங்கமல
முகமோ நிறைந்தமதி
காலோ விளஞ்சினை வரால்
மெய்யோ கலாபமயி லிடையோ
நுடங்குகொடி
விழியோ கடைந்த வடிவேல்
மையோ சுருண்ட குழல்
மலையோ திரண்ட முலை
வனிதைக்கெனப் புகலுவா
ரையோ விவட்கு விதி
கொலையோ வெனக்கதறி
யழுவா ரறைந்து விழுவார்"

"அங்கே யடித்தவடி யிங்கே
யலைக்குமலை
வல்லா மலலெய்து சொலையும
பங்கேருகத்தினறு மலர்போல்
விளங்குமுக
மறியாத பாவை யவையா
ளெங்கே பிறந்தனள்கொ
லெங்கே வளர்ந்தனள்கொ
லெங்கே யிருந்தனள் கொலோ
விங்கே யிறந்துவிய வந்தாளெனப்
பலரு
மிடைகின்ற வெல்லை தனிலே",

இவ்வாறு நிகழுங் கௌசிகன் குறுக்கிடுகிருன். அப்பனே நீங்கள் இவ்வளவு கஷ்டமடையவேண்டாம், தந்த நாடியான தந்திலேன என்ருர். உந்தம் நாடும், இவ்வுயிர்களும் தருவோம என்கருன். சத்தியத்தில் அணுவளவுதானும் பிசகுவார்களா அவர்கள்.

"பதிபிழந்தனம் பாலனை
யிழந்தனம் படைத்த
நிதியிழந்தன மினி நமக்குள தென
நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை யிழக்
கிலோ மென்றூர்
மதியிழந்து தன்வாயிழந் தருந்த
வன் மறைந்தான்'

விசுவாமித்திரன் பலிக்காது என்று எண்ணி மறைந்து போகின்ருன். வாசவன் அழைக்கின்ருன். விசுவாமித்திரன் வருந் தோற்றத்தைப் புலவர் நன்கு எடுத்துக்காட்டுகின்ருர். நிறைந்த நாணமும் குறைந்த பார்வையும் உடையவனுகிருன் விசுவாமித்திரன்.

கண்டார் வசிட்டர். என் அப்பா கொஞ்சம் கண்ணைத் திறந்துபாரேன் என்கிருர். எப்படி விசுவாமித்திரன் திறக்கமுடியும். குற்றஞ் செய்தவர்கள் கண் திறப்பார்களா? மனிதவர்க்கத்திற் சேர்வார்களா. இல்லவே இல்லை. இவை மறைவாக நிகழ்கின்றன. தன் கடமையைச் செலுத்த முற்படுகிருன். அரசன் சந்திரமதியை நோக்கி நீ கிழக்கு நோக்கி இருந்து கொண்டு உன் தெய்வத்தை நினை என்கிருன். வெட்டப் போகிறேன் என்று அவன் சொல்லவில்லை நிகழ்ச்சி அதுதான். சந்திரமதியின் கணவனல்லவா. அவன் இரக்கமில்லாதவனு, எப்படி அவன் வாய் வெட்டப்போகின்றேன் என்பதைக்கூறும். என்ருலும் இரக்கமுற்படுகிறது. யோசிக்கின்ருன். சந்திரமதி அரிச்சந்திரன் மனத்தைப் படம்பிடிக்கிருள். கணவனைத் தெய்வமாக வணங்குகின்ருள். அப்பா இந்நிலையிலும் எந் தமிழ்த் தெய்வத்தின் வாயிலிருந்து என்ன பிறக்கிது என்று பாருங்கள். என்னுவி இழக்க அஞ்சி அறம் வழுவேனென இயம்பும்.

"பொருந்து நீந்தத்திற் புற்புத
வாழ்வை நீமெய்யென்
றருந்தவத்தையும மறத்தையும்
மெய்யையும விடுத்து
வருந்தன் மன்னவ வழிவழி
சிறக்கென வாழ்த்தி
யிருந்த பின் சுடர்வட் படை
வலக்கையி னெடுத்தான்"

நிலை எவ்வாறு தளர்ந்த அரிச்சந்திரனுக்கு வாள் முனையிலே வாழும் சந்திரமதி அறம் போதிக்கின்ருள். இதென்னப்பா இது தமிழ்ப்போக்கை அறிந்தவளல்லவா சந்திரமதி. திருஞானசம்பந்தர் உயிர்வாழ்க்கை கண்ட நாதனூர் என்கிருர். சீபாய்ந்து, ஈமொய்த்து அழுகக்கொடு திரியும் சிறுகுடி இதுவென்கிருர். ஆகவே உடலின் நிலையாமையை உணர்ந்தவளல்லவா நந்தமிழ்த் தெய்வம்; சோதனைககாலமல்லவா இது. [illegible] றில் அணுவும் [illegible] வெட்டுப்படத் தயாராகின்ருள். மன்ச்சலனமின்றி ஆ! பரிதாபம் — வாளை யெடுக்கிருன அரிச்சந்திரன்.

"உலகுயிர்க் கெலாம் பசுபதி
யொருமுதலாயி
னலகில் சிறடையவள்
மொழிமறை யெனிரெங்க
ணிலகும் பலவர்றினும்
வாய்மை யீடிலதேல்
விலகுறுமலவ் வாய்மையை
விரதமாக் கொளின் யான்".
"நெறியினன்னவென் றனைவிடா
நெறிவட் குளதோ
விறுதியின்மையைப் பெறுகவில்
லெனினிவளிறுதி
பெறுக வென்று வாள் வீசினன்
பேதை தன் கழுத்தில்
மறுமணத்திடு மாலையாய்
வீழ்ந்த தவ்வடிவாள்"

திரும்பவாளை எடுக்கின்ருன் — இடையறு தீமையே செய்து கொண்டுவரும் ஆன்மாக்களுக்கும் நித்தியானந்தப் பெருவாழ்வைக் கொடுக்கும் எம்பெருமானுனவர் இச்செய்கையை நோக்குவாராகக் காட்சியளிக்கின்ருர். தடுக்கின்ருர். வரலாற்றை விளக்குகின்ருர். மோட்சத்தை அளிக்கின்ருர் தென்னுடுடைய சிவனே போற்றி. என்னுட்டவர்க்கும் இறைவா போற்றி.

'வாயனே மறிகடல் விடமுண்ட
வானவா மணிகண்டத் தெம்
மமுதே
நாயினேனுனை நினையவு மாட்
டேன்
நமச்சிவாய வென்றுன் னடி
பணிவாய்
பேயனுகிலும் பெருநெறி
காட்டாய்
பிறைகுலாஞ் சடைப் பிஞ்ஞக
னேயோ
சேயனுகி நின்றலறுவ தழகோ
திருப்பெருந் துறைமேவிய
சிவனே'

என்ற மணிவாசகரின் திவ்விய தேவாரத்தோடு புகழ்ந்து போற்றுவோமாக.

———

## சம அந்தஸ்துக்கு புத்தகுருவின் ஆதரவு

——

அத்துறுவெல்லவில் எக்சத் தருண சங்கமய என்னும் சங்கப் பகிரங்கக் கூட்டமொன்றில் தலைமை வகித்த ஸ்ரீ நந்துடுவ மேதானந்த தேரோ அவர்கள் தமிழ் மக்களின் உரிமையைப் புறக்கணித்தல் சனநாயக நீதியாகமாட்டாது, சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தக் கொடுப்பதே மிகநீதியான செயலாகும், அதுவே நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்துக்கு வேண்டிய ஒற்றுமையைத் தரக்கூடியதாகும், ஆகையினுலே சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்தக் கொடுத் [illegible] ஆசனத்தில் அமர்ந்திருப்போராது தவிர்க்கமுடியாத கடமையாகும் என்று தமது தலைமையுரையிற் கூறினராம். வேறு புத்த குருமாரும் இக்கூட்ட நிகழ்ச்சிகளிற் பங்குபற்றினர்.

# அறிவுத் துறையிற் றுருவனி

## நாவலர்பெருமான் காட்டிய நன்னெறி

## இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஓர் இன்றியமையாமை

உலகத்திலுள்ள உயிர்களின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்துக்கும் காரணகர்த்தா சிவபெருமான் ஒருவரேயாவர். இதனைச் சிவஞானபோதம் முதலாம் சூத்திரத்திலும் சிவஞானசித்தியாரின் பிரமாணவியல் முதலாம் பிரிவிலும் மெய்ஞ்ஞானிகள் விளக்கியுள்ளார்கள். மணிவாசகப்பெருமானும் "வித்தின்றியே விளைவு செய்குவாய் விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும் வைச்சு வாங்குவாய்" என அருளியுள்ளார்கள். வானுலகத்தையும் பூவுலகத்தையும் எல்லாவற்றையும் வித்தில்லாமலே தோற்றுவிப்பவனும் ஒடுக்குவிப்பவனும் இறைவன் ஒருவனே என வியந்து கூறியுள்ளார்.

தெல்லிப்பழை
திரு. செ. கோவிந்தசாமி

இற்றைக்கு எழுபதாண்டுகளுக்கு முன்னிருந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் இக்கருத்துக்களையெல்லாம் ஆராய வேண்டி வேத சிவாகமங்கள், உபநிடதங்கள், சைவசித்தாந்த சாத்திரங்கள் முதலான ஞான நூல்களாகிய ஆழியில் ஆழ்ந்து சுழியோடித் திருவருளால் பதிப்பொருளின் உண்மையைக் கல்லாதார்க்கும் கற்றோர்க்கும் இலகுவில் விளக்குபடி ஓர் வசனத்தில் உலகத்துக்குக்கர்த்தா யாவர் சிவபெருமான் என அருளியுள்ளார்கள். இவ்விதமான ஒரு உண்மைப் பொருளைப் பலருக்கும் விளங்க வைத்த பெருமை தமிழகத்தில் நாவலர் பெருமான் ஒருவருக்கே உரியதாகும். இக்காலத்து விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களின் விஞ்ஞானத்துக்கும் எட்டாத கருத்தைச் சுலபமாக நாவலர் பெருமான் விளக்கியுள்ளார்கள். பின் அப்பொருளை எங்கும் உள்ளவர் எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர் என விளக்கங் கொடுத்துள்ளார்கள். இக்கருத்தை ஒருமுறை ஈசான சிவாசாரிய சுவாமிகள் பண்டித மோகன் மாளவியவுக்கு சொல்லியபொழுது மாளவியா இத்தகையில சொன்ன பெரியார் யாரெனக் கேட்டனர். அதற்குச் சுவாமிகள் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுகநாவலர் பெருமான் எனக் கூறினர். பின் மாளவியா இக் கருத்தைப் பாராட்டிச் சென்றனர்.

உயிர் உடம்போடு சேர்ந்து அத்துவித மயமாய் இருக்கிறது. இறைவனும் உயிராகிய ஆன்மாவோடு வேறறக் கலந்திருக்கிறது எனச் சைவசித்தாந்தம் முரசறைகிறது. இக்காலத்து ஆத்மீகவாதிகள் பரமபதியாகிய பரமாத்மாவைப் போதித்துப்பின் அதை மறைத்து அநாதியே மலத்தோடு பதிந்திருக்கும் உயிராகிய ஆன்மாவைப் பிரமமெனக் கூறுகின்றனர். இந்தப் பிரமத்தை நித்தியம் என்கிருர்கள். இக்கொள்கை சைவ சித்தாந்தக் கருத்தின்படி மாயாவாதத்தின்பாற்படுகிறது. ஆன்மப் பிரமத்திற்கு மேல் ஒன்றுமில்லை எனக் கூறும் இவ்வகுப்பினர் அப்பால் பாபிரமம் ஒன்று இருக்கிறதென்பதைச் சற்றேனும் உணர்வதில்லை. ஆன்மப்பிரமம் அசுத்த மாயைக்குரிய இருபத்து நான்கு தத்துவத்துக்குள் அடங்கும் பரப்பிரமம் ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம் சிவதத்துவம் எல்லாம் கடந்த பரக்கிருதி பாற்பட நிற்கும் பரம்பொருளாகும். இதனை உணராத சிலர் ஆங்கிலம் படித்துஉத்தியோகம் பார்த்து அதனையும் விட்டுவிட்டுத் தங்களுக்குச் சுலபமான முறையில் வடநாடு சென்று மாயாவாத மதாச்சாரிகளைக் குருவாகக்கொண்டு அவர்கள் உபதேசங்களைப் பெற்று இவ் வீழநாட்டிற்கு வந்து மாயாவாத உபதேசம் செய்து சைவசமயத்தை அழிக்கிருர்கள் — மாயாவாதஉபதேசங்களினுல் சைவர்கள் தாம் முன் பெற்ற தீட்சை, அநுட்டான விதிகள் இவற்றையும் கைவிட்டு ஒரு சமயத்தையும் சேராது இறுதியில் எரிவாய் நரகத்தை யடைகின்றனர். இவ்விதமாக மதாச்சாரியர்கள் செய்யும்பணியா இறைபணி.

பதிவாக்காகிய வேதசிவாகமங்களை மனித வாக்கெனக் கொள்ளும் பாதகர்கள் கருத்தும் மாயாவாதமாகும். இம மதக் கருத்து இன்று எல்லாச் சந்நியாசிகளிடத்து மிருக்கின்றது. ஏனென்ருல் மாயாவாத உபதேசம் போதித்தாற்ருன வயிரூர உண்ணலாம். இக்காலச் சந்நியாசிகளுக்கு உணவுப் பிரச்சினையும் உண்டு. வருணாச்சிரம நெறி வாய்பு என்று தாய்நாட்டில் சிறுகுலைந்ததோ அன்று மேல்நாட்டு நாகரிகமும் மோகமான வழியில் தாண்டவமாடுகின்றது. வருணாச்சிரம நெறிக்குப் பதிலாக இன்று நாகரீகநெறி, ஆலயங்கள் — மடங்கள் — ஆச்சிரமங்கள் — குடிசைகள் முதலான தாபனங்களுள புகுந்து உண்மையை மறைக்கின்றது. இக் கருத்தை ஒவ்வொரு சைவ இளைஞனும் சிந்தித்து நன்னெறி கடைப்பிடித்து நல்வழியை நாடல் வேண்டும்.

## கற்றவர்க்கழகு கசடறமொழிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## ஆறுமுக நாவலர் திருத்தொண்டு நிலயம்

### பணியில் பங்குபற்றுமாறு சைவமக்களுக்கு விண்ணப்பம்

யான் சைவசமயம் பரிபாலிக்கப்பெற வேண்டும் என்ற பேரவாவுடன் சைவ பரிபாலன சபையில் அங்கத்தவராய்ச் சென்ற 20 வருட காலமாய் இருக்கிறேன். ஆனல் அச்சபை சைவ பரிபாலனத்திற்குச் செய்யும்சேவை மிக அற்பமானது என அபிப்பிராயமுடையவனாய் "ஆறுமுக நாவலரின் திருத்தொண்டு சேவா நிலயம்" ஒன்று 16—9—1954 தொடங்கிச் சிறு பிள்ளைகளுக்கு ஈவு நேரப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் எனது சொந்தப் பணத்திலிருந்து கொடுத்து இலவசமாய்ப் புத்தகங்களும் கொடுத்துச் சிவஞானசித்தியார் மனனமாய்ப் பாடமாக்கும்படி செய்து வருகின்றேன். கருத்துத் தெரியாத சிறுவயதிற் தேவாரம் பாடமாக்குவதுபோற் சிவஞான சித்தியார் பாக்களைப் பாலர்கள் பாடமாக்கி வருகிறார்கள்.

சென்ற 8-10 55 முதற் சூத்திரம் 70 பாட்டில் பரீட்சை நடைபெற்றது. இவ்விதம் இலங்கை முழுவதிலும் சிவஞான சித்தியார் பாக்கள் மனப்பாடமாய்ச் சைவசமயப்பிள்ளைகள் ஒவ்வொருவரும் பாடமாக்க வேண்டியது அவசியம்.

வே. கந்தையா,

மேலே குறிப்பிட்ட பரீட்சைப் பெறுபேறுகள்:

முதலாம் சூத்திரம்
70 பாட்டுகளும்

பெயர், A பிரிவு.

சுப்பையா சிலோசனதேவி, முத்தையா திலகவதியார், நடேசு இராசலிங்கம், நடேசு மார்க்கண்டு.

B பிரிவு

சுப்பையா பாலச்சந்திர கணேசசர்மா, நடராசா தில்லைநாயகி, மாணிக்கம் புஸ்பராணி, மாணிக்கம் பவளராணி.

C பிரிவு

நாகலிங்கம் நடராசா, நாகலிங்கம் வடிவளாகாம்பாள், சுப்பிரமணியம் புனிதவதியார்,

முதலாம் சூத்திரம்
1—10 பாட்டுக்கள்

பெயர், B பிரிவு

விசுவலிங்கம் சண்முகதாஸ், சம்பந்தர் நடராசா கனகசபை முத்துமாரி.

40பிள்ளைகள் (22 பெண்களும் 18 ஆண்களும்) இருந்தார்கள். மேற்காட்டிய 14 பிள்ளைகள் தவிர மிகுதி 26 பிள்ளைகளும் தேர்ச்சி பெறவேண்டும். குறிப்பு

ஆண் பிள்ளைகள் 18 பெண்பிள்ளைகள் 22, ஆக 40 பிள்ளைகளைச் சோதனை செய்தோம். முதற் சூத்திரத்தில் உள்ள சித்தியாரின் 70 விருத்தங்களையும் மனனம்பண்ணிப் பாடம் ஒப்பித்தார்கள். அவர்கள் சித்தி எய்திய கிரமப்படி மேலே காட்டப்பட்டிருக்கின்றது. இவ் வகுப்பை ஒழுங்குசெய்து தன் பணத்தையும் செலவு செய்து விடா முயற்சியாய் நின்று சைவசமய வளர்ச்சிக்காகப் பாடுபடும் திரு. வே. கந்தையா அவர்களின் சமயப் பற்றும் அன்பும் பாராட்டற்குரியன. இவரின் விடா முயற்சிக்குத் துணை செய்ய இன்னும் அன்பர்கள் முன்வருவார்களானல் சமயம் சிறந்து ஓங்கும்.

போ. ஒப்புக்குட்டி
தி. இராசசுந்தரம் J P
வே. இராமலிங்கம்
சி. சிற்றம்பலம்

### ஓர் விண்ணப்பம்

சைவசமயப்பெற்றோரே! சைவசமய ஆசிரியர்களே! ஏனைய சைவ அபிமானிகளே! சைவ சமய சபைகளே! வித்தியாசாலை முகாமைக்காரர்களே!

பாலர் வகுப்புத் தொடக்கம் மேல்வகுப்புகளிற்படிக்கும் சைவசமயத்திற்பிறந்த எல்லாப் பிள்ளைகளையும் சிவஞான சித்தியாரிலுள்ள 12சூத்திரங்களின் எல்லாத் திருவிருத்தங்களையும் மும்மூன்று சொற்களாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவையும் மும்மூன்று தடவை சொல்லிக் கொடுங்கள், வாசிக்கத் தெரியாத பாலர்களும் மனப்பாடமாக்குவார்கள். இது அனுபவத்திற் கண்ட உண்மை. கடவுட் பற்று இல்லாது, ஆஸ்திகம் அருகி, நாஸ்திகம் பரவும் இக்காலத்திற் சமய அறிவு அவசியம் தேவை. அதுவே மோட்சத்தைக் கொடுப்பதற்கு உதவியாகும். சிவபுண்ணியம். பாடமாக்கிய பின் படிப்பிப்பதற்குக் கருத்துக்கள் கேள்வியும் மறுமொழியுமாய் இனிமேல் வெளிவரும். கருத்துத்தெரியாது தேவாரம் பாடமாக்குமா போல் மேற்படி விருத்தங்களையும் பாடமாக்கச் செய்யுங்கள். இதுவரையும் படிப்பித்த சமய பாடம் போதாது.

[illegible]
[illegible]
13—10—55.

# கருத்துச் செறிந்த கற்பனைகள்

## கண்ணை உவமையாக்கிய கவின்

"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்பது பழமொழி. அதனுலே அருமையுள்ள பொருள்களை கண்ணேயென்று அழைக்கிறோம். திருநாவுக்கரசர் இறைவனை "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" என்று அழைக்கிறார்.

கண்களிலே முதலாவது சிறந்த தன்மை அவற்றின் ஒற்றுமை. ஒரு காதலனும் காதலியும் எவ்வாறு ஒற்றுமையாக ஒரு கருமம் செய்யவேண்டுமென்பதை கண்கள் எடுத்துக் காட்டுகின்றன.

"காதல் மனையாளுங் காதலனு
மாறின்றித்
தீதி லொரு கருமஞ் செய்யவே
— ஓதுகலை
எண்ணிரண்டு மொன்று மதி
யென்முகத்தால் நோக்க
[ருக்
கண்ணிரண்டு மொன்றையே
காண்"

எனும்வெண்பா மிக அழகாக மேற்கூறிய கருத்தை எடுத்துக் காட்டுகின்றது. பெரியவர்கள் தமக்கு ஒரு துன்பம் வரும்போது எவ்வளவு வருந்துவார்களோ அவ்வளவு பிறர் துன்பத்தையுங் கண்டு வருந்துவார்கள். அவ்வாறே கண்களும் பிற உறுப்புக்களின் துன்பத்தைக்கண்டு கண்ணீர் சொரிகின்றன. இங்கே பெரியவர்களைப் போன்றவை கண்கள் என்று எடுத்துக் காட்டப்படுகின்றது.

ஸ்ரீ வ. குகசர்மா

கண் விருப்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, துக்கம், கோபம், அன்பு ஆகிய உணர்ச்சிகளைப் பிரதிபலித்துக் காட்ட வல்லது. ஒரு அரசனுடைய பார்வையிலிருந்தே அவனின் நோக்கத்தை அறிந்து மதியுள்ள மந்திரிகள் நடந்ததாக நாம் பல நூல்களிலும் படிக்கின்றோம். அரசனிடம் அருட்கண்ணோட்டம் இல்லாவிட்டால் உலகம் அவனை வெறுக்கும். "கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம்" என்று கூறுகிறார் திருவள்ளுவர். ஒருவனுக்கு ஒரு விடமுள்ள பாமபு கடிகது விட்டதென வைத்துக் கொள்வோம். பாம்புக்குப் பகை கிரி. அந்தக் கிரியே வந்தாலும் விடம் இறங்காது. ஆனல் கிரியாகத் தன்னைப் பாவித்துப் பார்வை பார்க்கும் மாந்திரீகன் ஒருவன் தன் கண் பார்வையினுலே விடத்தை இறக்கிவிடுவான். நமது துன்பம் தீரவேண்டுமாயின் சிவபெருமானுடைய அருட்கண் பார்வை நமதுமேல் படவேண்டும். இதனுல்தான் "நின் அருட்கணுல் நோக்காதார் அல்லாதாரே" என திருநாவுக்கரசர் கூறியிருக்கின்றார்.

காவியங்களிலேகண்கள் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இராமரும் சீதையும் முதலில் சந்தித்தபொழுது ஒருவரையொருவர் நோக்கனுர்கள் என்றுதான் படிக்கிறோம் அவர்கள் கதைக்கவில்லை. ஆனல் காதல் உதித்தது தலைவனும் தலைவியும் ஓரிடத்தில சந்திக்கிறார்கள். அப்பொழுது தலைவி பொதுநோக்குடன் காதல் நோக்கையும் கொண்டு பார்க்கிறாள். அதனையே திருவள்ளுவர்

"இருநோக்கு இவளுண்கண்
உள்ளது ஒருநோக்கு
நோய் நோக்கொன் றந்நோய்
மருந்து"

இதே சந்தர்ப்பத்தை வேறோர் புலவர் எடுத்தாளுவதைப் பார்ப்போம். தலைவியின் பொதுநோக்குடன் காதல் நோக்கையும் கண்ட தலைவன் கருதுகிறான் 'உலகத்திற்கு மழையைக்கொடுக்க வரும் முகிலானது முதலில் தனது கருமையான நிறத்தினுலும் இடியின் ஆரவாரிப்பினுலும் உலகத்தைப் பயமுறுத்துகிறது. உடனே யாவரும் பயன் பெறத்தக்கதாக இனிய நீரை மழையாகக் கொடுக்கிறது. இவ்வாறான முகிலை நிகர்த்துள்ளது இப்பூவை நாட்டம்" எனக் கருதுகிறான், மற்றோர் உவமானமும் தலைவன் ஞாபகத்திற்கு வருவதாகப் புலவர் கூறுகிறார். முற்காலத்தில் சிவபெருமான் தன் கோபக் கனலுகிய நெற்றிக் கண்ணுல் முப்புரங்களையும் பொடிசெய்தார். ஆனல் அதற்குள்ளிருந்து தம்மை வணங்கிய மூவரை அழிக்கவில்லை. மன்மதனை எரித்தார், அருகில் நின்ற இரதியைஎரிக்கவில்லை. இவை எவற்றைக் காட்டுவதென்றல் சிவபெருமான் அறக் கருணையையும் மறக் கருணையையும் ஒரே நேரத்தில் காட்டவல்லவர் என்று தேவாதி தேவனுடைய இந்த இயல்பும்ஞாபகத்திற்குவருகிறது.

"கரபனை முதலிய கடந்த
கணனுதற்
சிற்பரன் யாவையும் சிதைய
வீறுசெய்
அற்புதமும் அவன்ருளும்
போன்றதாற்
பொற்புறு கின்றவிப்
பூவை நாட்டமே"

கண்கள் எங்கட்கு இன்றியமையாதவை. கண்களில் இருந்து புலவர்கள் பல நீதிகளையும் கற்பனைகளையும் காட்டிப் போயினர் என்பதை நாம் மேற்கூறியவற்றிலிருந்து கண்டோம்.

## பொய்த் தராதரப் பத்திரங்கள்

எஸ். எஸ். சி. பொய்த் தராதரப் பத்திரங்கள் யாரோ சிலரால் அச்சிட்டு வெளியிடப்படுகின்றனவாம். வேண்டிய விபரங்களை வித்தியாபகுதியாரிடமிருந்து அறிந்து ஒரு பத்திரம் பொய்யானதா மெய்யானதா என்பதை நிச்சயிக்கலாம்.

## தமிழ்க் கடைகளுக்கு நட்டம்

கொழும்புநகரமண்டபத்தில் நடந்த தமிழ்—சிங்கள சம அந்தஸ்துப் பிரேரணைக் கூட்டத்தின் பின் தமிழ்க் கடைகளுக்கு உண்டாக்கப்பட்ட சேதத்தைப் பற்றி விசாரணை செய்து, வேண்டிய நட்டத்தை அரசங்கம் கொடுக்க வேண்டுமென்று தமிழர் மகாநாட்டுக் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## சம அந்தஸ்து துரோகமாகும்

— டட்லி

எல்பிட்டியாவைத் சேர்ந்த நியகமவில் புனியாரும ஞாயிற்றுக்கிழமைப் பாடசாலைப் பரிசளிப்புக் கூட்டத்தில் ஸ்ரீ டட்லி சேனநாயக பேசும்போது தமிழுக்குச் சமஅந்தஸ்து கொடுப்பதென்று சொல்லுவதே துரோகமாகும் என்று கூறினராம்! இது இப்பொழுது மறுக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தது தமிழினம்

———

1-ம் பக்கத்தொடர்ச்சி

ழிமையைக் காக்காதவன் பிற மொழியைக் காக்க முடியாது.

அரசியற் படையெடுப்பில் அடிமையாகாத தமிழினம் கலாசாரப் படையெடுப்பால் அடிமைப்பட்டுவிட்டது. ஒரு நாட்டின் அரசியல் பொருளாதார அடிமைத்தனத்திலும் கலாச்சார அடிமைத்தனம் அபாயமானது.

கலாச்சார அடிமைகளாய் வாழ்வதிலும் மாண்டு மடிவது நல்லது. இன்று தமிழகம் மலிவான சந்தையாக மாறிவிட்டது. நம்மிடம் சிறந்த பொருள் இங்கிருக்கிறது என்று வெளி நாட்டாருக்குக் காட்டுங்கள்.

தமிழன் மனதில் உதியாத கருத்து உலகிலில்லை. திருவாசகத்தில் 2000 ஆண்டுகளின் முன்பே அணுவைப்பற்றிக் கூறியிருந்தும் ஐன்ஸ்டைன் அணுவைப்பற்றிக் கூறிய பின்பே அதனை மதிக்க ஆரம்பித்தார்கள். கார்ல மார்க்ஸ் பிறக்கு முன்பே தாயுமானசுவாமிகள் பொதுவுடைமைக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

வைரக் கருத்துக்களைப் பூட்டி வைத்துக் கருத்துக்களைத் தேடி உலகெங்கும் அலைவானேன்? நாம் உண்மைத் தமிழர்களாக வாழ வேண்டும்.

பணங்கொடுத்தாவது நாம் சிங்களவர்களுக்குத் தமிழைக் கற்பிக்கவேண்டும், அவர்கள் அதன் சுவையில் ஈடுபட்டு விட்டால் வலியவே தமிழைப் படிப்பார்கள் என்று கூறினார்.

———

## மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் மகா கும்பாபிடேகம்

———

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகாபாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் மன்மத வருஷ ஐப்பசி மாதம் (21-10-55) 4ம் உ வெள்ளிக்கிழமை முற்பகல் மணி 10. நி. 8. தொடக்கம் 10. 30க்குள் வரும் தனுஸ் லக்கின சுபமுகூர்த்தத்தில சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகம் சகல கிரியா கலாபங்களுடன் ஊரெழு சிவஸ்ரீ ச. பாலசுந்தரக் குருக்கள் அவர்களால் செய்யப்படும். அன்று 12 மணி அளவில் மஹாபிஷேகமும் அம்பாள் வீதியுலாக் கொண்டருளும் பவனி உற்சவமும் மேற்படி ஆலய அதிபர் அவர்களால் சிறப்பாக நடாத்தப்படும். அடியார்கள் தரிசித்து இஷ்ட சித்திகள் பெற்று இனிது வாழ்க என்று சிவஸ்ரீ ச. பாலசுந்தரக்குருக்கள் ஊரெழு அறியத் தருகின்றார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/333

நீர்வேலி கார்த்திகேசு இளையதம்பி — வழக்காளி

காங்கேசன்துறை ரோட்டு ஆறுமுகம் செட்டியார் பாலசுப்பிரமணியம் — எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு MB/383-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1955ம் ஆண்டு கார்த்திகை மீ 18ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை ரூபா 4680/= இதில் ரூபா 4500/=க்கு 1-8-55 தொடக்கம் 21-9-55 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 சகு 12 வீதமான வட்டியும் அதற்குப்பின் முழுத் தொகைக்கும் 21-9-55 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீதமான வட்டியும்.

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை பாரயடி நிலப்பரப்பு 1 11/16ம் கல் வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் முத்துத்தம்பியின் உருமைக்காரர் வடக்கு இரண்டாம் காணி மேற்கு காங்கேசன்துறை ரோட்டு தெற்கு வள்ளியம்மை மகள் செகதாம்பாள். இதடங்கலும்,

2. மேற்படி இறை வண்ணார்பண்ணை கிழக்கிறை நொச்சிப்பள்ளம் பாரயடி அல்லது பாரயரியான்காடு பாரயடி நிலப்பரப்பு 2 குழி 15 1/6ம் கல் வீடும், கிணறும். செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கதிர்காமர் வயித்திலிங்கமும் பங்காளரும் வடக்கு செல்லையா செட்டியார் பெண் தங்கமாவும் V. K. இராசாத்தினமும் மேற்கு காங்கேசன்துறை ரோட்டு. தெற்கு 1ம் காணி இதடங்கலும்.

A. S. Kandiah,
ஆ. ச. கந்தையா
காரைநகர், கொமிஷனர்
5-10-55

M. 152 21—10 (ரூ 50)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

காரைநகர் கிழக்கு கந்தையா முருகேசு வழக்காளி.

இல. 9175. எதிராக

1. களபூமி காரைநகர் கிழக்கு முத்துக்குருக்கள் சோமசுந்தரஐயரும்

2. பெண் அமிர்தலவிதாம்பிகையும் எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின 9175ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955ம் வூல கார்த்திகை மீ 12ம் திகதி சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா: 2521-39ம் ரூபா: 2500/=க்கு 10 9-52 தொடக்கம் 16-12-52 வரை 4 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 213/03 சதம்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று களபூமியிறை "காரைண்ட தோட்டமும காரைண்ட புலமும்" நாகாண்ட தோட்டமும பாரீ இல பத்தொன்பது (பா. நீ இல 19) பனைகள் வடலிகளும் தென்னம்பிள்ளைகளும் செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் கிணறும் எல்லை கிழக்கு சண்முகம் வேலுப்பிள்ளைக்கும் கந்தர் காசிநாதருக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு சபாரெத்தின ஐயர் நாகேஸ்வர ஐயருக்குடைய வாதனம், மேற்கு ஒழுங்கை. தெற்கு முருகமூர்த்தி கோவிலுக்குரிய வாதனமும் சண்முகம் வேலுப்பிள்ளைக்குரிய வாதனமும். ஆனால் சொல்லப்பட்ட கிணற்றில் வடக்கெல்லைக் காணிக்குரிய தண்ணீர்ப்பாகமும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் பிறநீங்கலாக.

1955 வூ ஐப்பசி மீ 3உ

வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்.

M 160 21-10 55 (ரூ 300)

உ

நியாயவாதி ஸ்ரீ சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களின்

## நூற்றாண்டு விழா

மேற்படி விழா யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 27—10—55 வியாழக்கிழமை கீழேகாண வரும் கிரமப்படி நிகழும்.

1 காலை 9-30 மணி பூசை
2 பகல் 12-30 ,, போசனம்
3 மாலை 3-00 ,, விளையாட்டுக்கள்
4 ,, 5 30 ,, பகிரங்கக்கூட்டம்

தலைவர் ஸ்ரீ C. குமாரசுவாமி C. B E. அவர்கள்

சொற்பொழிவாளர்கள்:

ஸ்ரீ A. V. குலசிங்கம் J. P. அவர்கள்
,, C. பொன்னம்பலம் அவர்கள்
,, V. நாகலிங்கம் J. P. அவர்கள்
5 ,, நன்றியுரை

அ. அருணம்பலம்
காரியதரிசி
யாழ். இந்துக்கல்லூரி முகாமைக்காரர் சபை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
வண்ணார்பண்ணை
16—10—55.

M 154 21-10

## யாழ்ப்பாண நகரசபை

பின்னாற்காணப்படும் சந்தைகளில் வாடகைப் பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப் பத்திரங்கள்

பின்னாற் குறிக்கப்படும் சந்தைகளில் 1956-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒரு வருட காலத்துக்கு வாடகைப்பணம் அறவிடும் உரிமையைக் குத்தகையாகப் பெறுவதற்கான முத்திரையிட்ட கேள்விப் பத்திரங்கள் அனுப்புமாறு யாழ்ப்பாண நகரசபைக் கொமிஷனர் அழைக்கின்றார்.

கேள்விப் பத்திரங்கள் நகரசபைக் கந்தோரில் கிடைக்கும் குறித்த மாதிரிப் பத்திரங்களில் கேட்டு அனுப்பப்பட வேண்டும்.

மாதிரிக் கேள்விப் பத்திரங்களை இக்கந்தோரிலே பின் வருமாறு பிணைப்பணங் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்

1. கீழே காணப்படும் 1-ம் குத்தகைக்கு ரூபா 500/-

2. கீழே காணப்படும் 2-ம், 3-ம், 4-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 250/-

3. 5-ம், 6ம், 7-ம், 8-ம், 9-ம் குத்தகைகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 50/-

மாதிரிக் கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படுமுன் 1, 2, 3, 4-ம் குத்தகைகள் விஷயமாய் முத்திரைச் செலவுக்கும், பிணை உறுதி எழுதும் நொத்தாரிஸ் செலவுக்குமாக மேலும் ரூபா 150 பிணைப் பணம் கட்டப்பட வேண்டும்.

மாதிரிக் கேள்விப் பத்திரங்கள் 1955-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணி வரையும் வழங்கப்படும்

சகல கேள்விப் பத்திரங்களும் மேல் உறையின் மேற்பக்கமாக இடது கோணத்திலே சந்தைகளின் குத்தகைக் கேள்விப்பத்திரம் எனத் தெரிவித்து, யாழ்ப்பாண நகரசபைக்கொமிஷனருக்கு விலாசமிட்டு, 1955-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை மத்தியானம் 12மணிக்குப் பிந்தாது இந்தக் கந்தோர் வந்து சேரவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் அதே நாளிற் தானே 5-11-55—பிற்பகல் 12 50 மணிக்கு இந்தக் கந்தோரில் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் சமுகமாயிருக்குமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு சந்தைக்கும் வேறு வேறான கேள்விகள் கேட்கப்படவேண்டும்

சபையால் தெரிப்பட்ட கேள்விக்காரர் அவ்வாறு தெரிப்பட்டு ஐந்து நாளைக்குள் தமது குத்தகைக் கேள்வித்தொகையில் மூன்றில் ஒரு பங்கைக்கட்டவேண்டியவர் மீதித் தொகை, 5, 6, 7, 8, 9ம் குத்தகைகள் விஷயமாய் முழுக்குத்தகையும் அடங்கியிருக்கும்படி 'குத்தகைகள்' 1955-ம் ஆண்டு மார்கழி 1-ந் திகதியன்று, அல்லது அதற்குமுன் கட்டப்படவேண்டும் 1-ம், 2-ம், 3-ம், 4-ம் குத்தகைகள் விஷயமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் 1955-ம் ஆண்டு மார்கழி 1ந் திகதிக்கு முன்னதாகத் தாம் முன்னர் கட்டிய ரூபா 150 உடன் சேர்த்து முத்திரைகள் கொடுத்தும், நொத்தாரிஸ் சலாரை இறுத்தும் உண்மையான காணியை ஈடாகக் கொடுத்து நொத்தாரிஸ்மூலம் பிணை உறுதி முடித்துக் கொள்ளவேண்டும். மீதித் தொகை எட்டுச் சம பங்குகளாகப் பிரித்து ஒவ்வோர் மாதமும் 15ந் திகதியன்று அல்லது அதற்கு முன் கட்டப்பட வேண்டும் இதிலே முதல் கட்டுப்பணம் குத்தகை நிபந்தனைகளுக்கிணங்க, 1956-ம் ஆண்டு தைமாதம் 15-ந் திகதியன்று அல்லது அதற்குமுன் கட்டப்பட வேண்டும். குத்தகை நிபந்தனைப் பத்திரங்கள் பார்வையிடுமாறு இந்தக் கந்தோரிலே கிடைக்கும்.

எந்தக் கேள்விக்காரரும் கேட்கப்படுந் தொகையைக் கட்டவும், மேற்கூறியபடி நொத்தாரிஸ்மூலம் பிணை உறுதி முடிக்கவும் தவறுமிடத்து, அவரது பிணைப்பணம் பறிமுதலாக்கப்படும். குத்தகை திரும்ப விற்கப்படும்.

எல்லாக் கேள்விகளையும், அல்லது எந்த ஒரு கேள்வியையும் நியாயம் காட்டாமலே தள்ளிவிடச் சபைக்கு உரிமையுண்டு.

மற்றும் விபரங்களை இக் கந்தோரில் பெற்றுக்கொள்ளலாம்.

**சந்தைகள் வருமாறு:**

1. பெரியகடை காய்கனி மரக்கறிச் சந்தை, இரு பிரதான நிரந்தர கட்டிடங்களும், சபையால் அமைக்கப்பட்ட பலசரக்குக் கடையும், சபையின் அனுமதியோடு ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலைகளும், தகரக் கொட்டில்களும், தெருவுக்கும் தகரக்கொட்டில்களுக்கும் இடையிலுள்ள வெளியிடமும், அரசாங்க விற்பனை வசதிப் பகுதிக்கென ஒதுக்கப்பட்டுள்ள வெளியிடமும், சபையின் அனுமதியின்றி நிரந்தரச் சந்தைக் கட்டிடங்களின் வடக்கு வாசலில் அமைக்கப்பட்டிருக்கும் நாலு தகரக் கொட்டில்களும் புறநீங்கலாக.

2. பெரியகடை மீன்கடை — அரசாங்கத்தாலே காணி எடுத்துக் கொள்ளப்படுமளவரையில் பண்ணைத்துறையில் மீன் விற்கும் இடமும் உட்பட.

3. சின்னக்கடை — இறைச்சிக் கடைகள் எல்லாம் புறநீங்கலாக.

4. செங்குந்தர் சந்தை

1. இரண்டு அறைகள் உட்பட. ஆனால், சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக் கொட்டில் புறநீங்கலாக.

2. இரண்டு அறைகளும், சபையின் அனுமதியுடன் அமைக்கப்பட்ட தகரக் கொட்டிலும் புறநீங்கலாக.

5. அரியாலைச் சந்தை—அறை புறநீங்கலாக.

6. முத்திரைச் சந்தை — ஒரு கடை புறநீங்கலாக.

7. கொழும்புத்துறைச்சந்தை.

8. நாவாந்துறைச் சந்தை.

9. பாஷையூர்ச் சந்தை.

ஹட்சன் செல்வராசா
தற்காலிக கொமிஷனர்,
யாழ்ப்பாண நகரசபை.
நகரசபைக் கந்தோர்,
யாழ்ப்பாணம்
18-10-55.

G. 38 21, 28 10.55.

## பரமேசுவரக் கல்லூரி நவராத்திரி நுண்கலை விழா

———

நிகழும் புரட்டாதி மீ 30உ (16-10-55) ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மீ 7உ (24-10-55) திங்கட்கிழமைவரை நாள்தோறும் மாலை 6-30 முதல் 10-30 வரை பரமேஸ்வரக் கல்லூரி நுண்கலைக் கழகத்தின் ஆதரவில் இலங்கையின் பிரபல சங்கீத, நடன, நாடக விற்பன்னர்கள் கல்லூரி மண்டபத்தில் சங்கீத நடன நாடக விருந்தளிக்கின்றனர்.

## வெந்தீஸ் விற்பனவு அடைவு நகைகள்

———

யாழ்ப்பாணம் வண் கிழக்கு கலட்டி 576/5ம் நம்பர்க் கடையில் அடைவு பிடிக்கும் தா. சி. குமாரசாமி, அன்ட் ஸ்ரீமதி தா. சி. சோமசுந்தரம் அவர்கள் கடையில் 1954ம் ஆண்டு வைகாசி மாதம் முதலாந் திகதி தொடக்கம் 1954ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதி வரையும் தவணைதப்பி எடுபடாமல் இருக்கும் நகைகளை 1955ம் ஆண்டு கார்த்திகை மாதம் 5-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி இடத்தில என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்
வெந்தீஸ் மேஸ்தர்

M 159, 21-10, 28-10

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோட்டுவிற்பனவு விளம்பரம்

காரைநகர் கிழக்கு களபூமி சின்னக்குட்டி கந்தையா
—வழக்காளி

இல. 10666

எதிராக

1. வண்ணார்பண்ணை கிழக்கு முருகேசு கந்தவனமும்
2. ஷெ V. மு, கந்தவனம் மகள் இலக்கிய சுந்தரியும்
3. உருப்பராய் சின்னையா பொன்னையாவும் — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10666-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப் படும் ஒரு துண்டுக்காணி 1955ஆ மார்கழிமீ 3௨ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கிறை "தட்டான் தறை" நி. பரப்பு 9ம் $14\frac{1}{2}$ குழியும் அளவின் படி 9 பரப்பும் $5\frac{1}{2}$ குழியும் (ஐந்தரை) இதில் உலாந்தா மேஸ்தர் யோமனுவல் என்பவரால் 29-6-51ல் 580-ம் இலக்கத்தில் அளந்துகண்ட படத்தின்படி வடமேற்குப் பக்கமாக 2ம் துண்டு என்று அட்சரமிட்ட காணி விசாலம் 1 பரப்பும் 3 குழியும் அதைச்சேர்ந்த பயிர் வகைகளும் அப்பரப்பு 1ம் குழி 3 க்கும் எல்லை கிழக்கும் தெற்கும் நாகலிங்கம் பெண் கண்மணியினுதனம், அதாவது 1ம் துண்டு என்று அட்சரமிட்ட வாதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு ஆறுமுகம் வைத்திலிங்கத்துக்கும் ஒழுங்கையும், இக்காணி D 211/212ம் புத்தகத்தில் பதியப்பட்டது.

நான்கு துண்டுக் காணிகள் 1955ஆ மார்கழிமீ 6௨ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தஅந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணிகள் விபரம்

2 யாழ்ப்பாணப் பகுதி வேலணைக் கோயிற்பற்று வேலணை மேற்கு இறை திண்ணைக் கலட்டி நி பரப்பு $4\frac{1}{8}$ம் பனைகளும் வடலிகளும், எல்லை கிழக்கும் வடக்கும் கார்த்திகேசு பெண் சின்னாச்சிக்குடையவாதனம். மேற்கு ஆறுமுகம் கைம்பெண் செகசமலத்துக்குடைய வாதனம். தெற்கு சுப்பிரமணியம் பெண் தையலம்மாவினுதனம் இக்காணியடங்கலும் இக்காணி C. 93/174-ம் இலக்கப்புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

3. ஷையூர் தின்னைக்கலட்டி $4\frac{3}{4}$ பரப்பு (நிலப்பரப்பு பனைகளும இலுப்பை மரமும், எல்லை கிழக்கு வயித்தியனாதர் கந்தையாவுக்குடைய வாதனம், வடக்கு நாகமணி சபாபதியுடையவாதனமும், பங்காளரும், மேற்கும் தெற்கும் ஒழுங்கை இக் காணி C 93/174-ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

4. ஷையிறை திண்ணைக்கலட்டி நிலப்பரப்பு $1\frac{3}{4}$-ம் பனைகளும், எல்லை கிழக்கு நாகலிங்கம் பெண் சின்னாச்சிக்குமுடையவாதனம். வடக்கு கணபதிபெண் பாறுபதிக்குமுடையவாதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு கார்த்திகேசன பெண் பறுபதத்துக்குடைய வாதனம், இக் காணி C. 93/176-ம புத்தகத்தில் பதியப்பட்டது.

5. ஷையிறை திண்ணைக்கலட்டி நி. பரப்பு 6-ம் குழி 3ம் பனைகளும் வடலிகளும், எல்லை கிழக்கு கந்தவனம் பெண சின்னாச்சிப்பிள்ளைக்கும், நாகராசா பெண் சொர்ணம்மாவுக்குமுடைய வாதனங்கள். வடக்கு கையொழுங்கை. மேற்கு முருகேசு தம்பிப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுடைய வாதனங்களும். கனகசபை வயித்திலிங்கத்துக்கும் சுப்பிரமணியம் பெண் இளையபிள்ளைக்குமுடைய வாதனங்கள். இதடங்கலும் இக்காணி C. 272/277ம் புத்தகத்தில் பதியப்பட்டது.

இக்காணிகளைப்பற்றி வேறுவிஷயம் அறியவிரும்பினால் பிறக்டர் வண்ணார்பண்ணைகிழக்கு உவாட் & டேவ்வை. சிவசுப்பிரமணயம் அவர்களிடம் அறிந்துகொள்ளலாம்.

S. Ratnasabapathy,
கொமிஷனர்.
51, 4th Cross Street,
Jaffna, 18-10-55.
M, 156, 21-10-55. (௲ 200)

---

## நீர்வேலி கிராமச் சங்க வேலைகளின் ஒப்பந்த அறிவித்தல்

பின்னாற் காணப்படும் கிராம வேலைகள் ஒப்பந்தமாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன:-

கிராமச்சங்கக் கந்தோரில் ரூபா 10 கட்டி எடுக்கும் மாதிரிப் பத்திரங்களிலேயே மனுச்செய்ய வேண்டும், அப்பத்திரங்கள் 1955-ம் ஆ ஐப்பசி மீ 20௨ வியாழக் கிழமை பகல் 12 மணிக்குமுன் உரும்பராய் சங்கக் கந்தோரில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் கடதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் இடதுமேற்பக்கத்தில்மனுப்பத்திரம் என்று எழுதி நீர்வேலி கிராமச் சங்கத் தலைவருக்கென விலாசமிட்டு 1955-ம் ஆ ஐப்பசி மாதம் 22 ௨ சனிக்கிழமை பகல் 10 மணிக்கு முன்நீர்வேலி மேற்படி சங்கக் கந்தோரிக்கிடைக்கும்படி அனுப்புக.

தெரிந்தெடுத்த கேள்விக்காரன் மேற்படி சங்கத் தலைவருடன் ஒரு கிழமைக்குள் பொருத்த மெழுதிக் கொள்ளவேண்டும். மனுப் பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ சங்கத்துக்கு அதிகார முண்டு.

### வேலைகளின் விபரம்

உரும்பராய் மயிலன் இருளாய் என்னும் ஒழுங்கையை ரேட்டாக்த் திருத்துகிறதற்கு ஒப்பந்தப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன,

அத்தியார் அருணாசலம்
நீர்வேலி கிராமச்சங்கத் தலைவர்
1955ஆ ஐப்பசி மீ 19௨
M. 155 21—10

---

## காணி உரிமைப்பதிவு மசோதா

—O—

### செனட் சபையின் தெரிவுக் கமிட்டி

இக்கமிட்டிக்கு பிரதிநிதித்துவங்கள் அளிக்க விரும்பும் சகலரும் அப்படிப்பட்ட பிரதிநிதித்துவங்களை எழுத்தில் 1955 நவம்பர் 30ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 1, செனட் சபைக் கட்டடத்திலிருக்கும் செனட் சபையின் லிகிதருக்கு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எழுத்தில் பெறப்பட்ட பிரதிநிதித்துவங்களைப் பரிசீலனை செய்தபின் நேர்முகமாக வாக்குமூலம் பெறக் கமிட்டி தீர்மானிப்பின் விசாரிக்கப்படும் இடத்தையும், நேரத்தையும் குறிக்கும் அறிவித்தலைச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பெறுவர்.

ஆங்கிலத்திலுள்ள காணி உரிமைப்பதிவு மசோதாவின் பிரதிகளை கொழும்பு 1. செக்ரடேரியட்டில் இருக்கும் அரசாங்க பிரசுர இலாகாவில் பிரதி ஒன்றுக்கு ரூபா 3-40 செலுத்துவதன் மூலம் வாங்கலாம்

ஈ. வி. ஆர். சமரவிக்ரம
செனட் சபையின் லிகிதர்
செனட் கொழும்பு 1.
1955 அக்டோபர் 14ந் திகதி
G 35 26—10

---

முன்னிதழ்த் தொடர்ச்சி

# மகா கவி காளிதாசரின் குமார சம்பவம்

தமிழாக்கம்

பரமேஸ்வரக்கழகம் — ச. இராமச்சந்திரன்

முன்னைநா ளனங்கன் முக்கணன் விழியால் முயற்சியிற் தோற்றன லந்த
பின்னை நாயகனைப் பிடித்தகப் படுப்பான் பிணித்திடு பாசமோ கழுத்தில
என்னையா மகத்தி லென்னுமா றிவளுக் கிணைக்கர மானநன் கியைந்து
மன்னி நாண்மலரு மலரினுமென்மை வாய்ந்துற வயங்கிய வன்றே (41

நிலவுகா றாள வடமியைந் திடலா னேரிழை பார்பமு மார்பி
னுலவறு தெய்வ வொளியினுலதனை உடையவ ணித்தில வடமும்
விலகுரு தவைக ளொன்றனை யொன்று விளங்க நக்லணி செயும் விதத்தால்
இலகு மிவ் விரண்டு மித்தொழிற் கிதா விதாமெச்றிபப்புத வெளிதே. (42

திங்களை யடைந்த திருமகள் முன்னர்த் திருத்தகு தன்னொரு தவிசாய
பங்கயப் போதின் பரிமக நுகரான் பங்கய மடைந்தன ளலிலோ
அங்கொரு திங்களழ கொளியததா னனுபவித் திடர்கிலா ளுமயினை
இங்கிவள் வதனத் திரண்டையும் பெற்றே இன்புற அணுகின ளிசைந்தே (43)

செங்கிறத் தளிரி னிடையுற சலர்ந்து சிறந்தவெண் மலரது சேரின்
அங்கிறத் தாள ம்ரத்தவா ணிறத்தி னணிதுகி ரதனிடை அடையின்
எங்கிறப் பொருளு மிணையிலை யென்ன இமயமா மடந்தைதா னியற்றும்
மூங்கிறத் தொழிலார் முக்கணன் விரும்பு மூரலுக் கிணையுறு முயன்றே (44

சுருதிசன் சுமையா யாழினை மிடற்றிற் தோன்றுமெல் விசையது தய்ப்போர்
இருசெவி துயரினினைந்திட மீட்டல் என்னவே இமய நற செல்வி
தருமமிழ் தேய்க்குந் தண்மொழி தனக்குத் தாவிணையாகவே இசைக்க
சுருதியே பாடுவ கருக்குயி லிசையைக் கற்பனை செய்துவர் கவிஞர்
தொடரும். (45

---


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சகிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாஙகவுமான விசேஷ ஒழுஙகுகள செய்யப்பட்டிருக்கின்றன,

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11338

சுப்பையா அளகரத்தினம் கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணம்
—வழக்காளி

Vs

1. செல்லப்பா ஆறுமுகமும் பெண் அன்னலட்சுமி
2. கொக்குவில் கிழக்கு
எதிரிகள்

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 1338-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1955-ம் வருடம் மார்கழி மாசம் 3-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

யாழ்ப்பாணம்நல்லூரைச் சேர்ந்த கொக்குவிலில் காட்டுப்புலம் என்னும் காணி சி இ 9 குழி 15 3/8 இதில் தென் கிழக்குப் புறமாக சி இ 2 குழி $12\frac{1}{2}$ சீகசி மிகுதி சி. இ. 7 குழி 2 7/8

இதற்கு எல்லை கிழக்கு சீக்கப்பட்ட காணி பொன்னம்பலம் அப்பையாவுக்கும் பெண் தங்கம்மாவுக்குரிய ஆதனமும் கிராமக்கோடும் வடக்கு ரோட்டு.

மேற்கு V. இராசரத்தினம் பெண் கண்மணியின் ஆதனம்,
தெற்கு கந்தையா பெண் ஆச்சிப்பிள்ளையின் ஆதனம்
இவை அடங்கலும்

வ. அ. துரையப்பா
யாழ்ப்பாணம்
18-10-55
M 158 7-10 (௲ 100)

---

## அளவெட்டி சதானந்த வித்தியாசாலையில் திவ்ய ஜீவன சங்க அங்குரார்ப்பணம்

திவ்விய ஜீவன சங்கத்தின் கிளை ஸ்தாபனம் ஒன்று அளவெட்டி சதானந்த வித்தியாலயத்தில் மேற்படி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரையவர்கள் தலைமையில் 12-10-55 புதன்கிழமை அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது. அவ்வமயம்கூட்டுப்பிரார்த்தனை நடந்தபின் திருவாளர் எஸ். ஈஸ்வரசர்மா அவர்கள் மேற்படி சங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கமாக எடுத்துரைத்தார்கள். ஈற்றில் பின்வருமாறு உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவர் திரு. அ. பொன்னுத்துரை, உபதலைவர்கள திருவாளர்கள்: இ. முருகேசு, த. இராசரத்தினம், செல்வி. பொ. சந்திரோதயம், காரியதரிசி செல்வன் வை. சுப்பிரமணியம், உபகாரியதரிசி திரு பொ. தனபாலசிங்கம், தனாதிகாரி செல்வன் வி. மகேந்திரன், உபதனாதிகாரி செல்வி ச. பொன்னம்மா ஏனைய செயற்குழுவினர் எண்மர்,

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond.) residing at 245, Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday October, 21, 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org